**பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள் (2021 - 2022)**

**X STD SAMPLE QUESTION PAPER (2021 -2022)**

**தமிழ் (006)**

**கால அளவு : 90 நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள் : 40**

**Time allowed : 90 Minutes** **Maximum marks : 40**

---

**குறிப்பு : இப்பகுதி 50 வினாக்களைக் கொண்டது.**

**40 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**வினா ஒன்றுக்கு ஒரு மதிப்பெண் வீதம் 40 மதிப்பெண் வழங்கப்படும்**

---

**பகுதி -அ ( Section-A)**

**படித்தல்( Reading comprehension)**

**I.<u>பின்வரும் பத்தியைப் படித்துப் பொருள் உணர்ந்து தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்குஏற்றவிடைகளை எழுதுக.</u>**
**5×1=5**

**"பாண்டியனுக்கு உரிய பொருநை என்னும் தாமிரபரணி ஆற்றந்துறையிலே முத்துப் பிறக்கும்; வைகை ஆற்றின் கரையிலே முத்தமிழ் சிறக்கும்" என்று தமிழ்க்கவிஞர் கூறுவர். பாண்டிய நாட்டின் தலைநகரமாகிய மதுரை தொன்றுதொட்டு வைகை ஆற்றின் கரையிலே வீற்றிருக்கின்றது. அந்நகரில் தமிழ்ச் சங்கம் நிறுவி முத்தமிழையும் பாண்டிய மன்னர் முறையாகப் பேணி வளர்த்தனர். தமிழ்ச் சங்கத்தில் நாடி வந்த பிற நாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கு வரிசை அறிந்து பரிசளித்தனர். அதனால் பாண்டிய நாட்டில் நல்ல தமிழ் பரவிற்று. நாடு பல கண்ட நல்லிசைப் புலவராகிய அவ்வையார் "பாண்டியநாடு நல்ல தமிழ்உடைத்து" என்று நாவாரப் போற்றினார்.**

**<u>வினாக்கள்</u>**

I. பாண்டிய நாட்டின் தலைநகர் எவ்வாற்றின் கரையிலே வீற்றிருக்கின்றது?

அ. பாலாறு ஆ. பொருநை
இ. வைகை ஈ. தாமிரபரணி

2. பாண்டிய நாட்டில் நல்ல தமிழ் பரவியதற்கான காரணம் யாது?

அ. மக்கள் தமிழைப் போற்றினர்

ஆ. வைகை ஆற்றின் கரையிலே முத்தமிழ் சிறக்கும்

இ. தமிழ் மக்களை மன்னர் சிறப்பித்தனர்

ஈ. தமிழ்ச் சங்கம் நிறுவி முறையாக
மன்னர்கள் முத்தமிழைப்பேணி வளர்த்தனர்

3. தாமிரபரணி ஆற்றங்கரையில் பிறப்பது எது?

அ. முத்து ஆ. முத்தமிழ் இ. செல்வம்

ஈ. மணல்

4. "பாண்டியநாடு நல்ல தமிழ் உடைத்து" எனப் போற்றிய புலவர் யார்?

அ. தமிழ்க் கவிஞர் ஆ. நல்லிசைப் புலவர்

இ. அவ்வையார் ஈ. கீரன்

5.மதுரை நகரில் வளர்க்கப்பட்டது எது?

அ. ஆட்சி பலம் ஆ. ஆற்று வளம்

இ. மதுரை மல்லி ஈ. முத்தமிழ்

II.<u>பின்வரும் உரைநடை பகுதியைப் படித்துப் பொருள் உணர்ந்து தொடர்ந்து வரும்பலவுள் தெரிவு வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக</u> 5×1=5

திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்தஓர்அதிகாரத்தையே அமைத்திருக்கிறார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும்

அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது. கோவலனைப்பிரிந்து வாழ்ந்த கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப்போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துவதாக சிலப்பதிகார ஆசிரியர் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் கூறுகிறார். கல்வியும் செல்வமும் பெற்றபெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். கலிங்கத்துப் பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினருக்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கி யுள்ளார்.விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதை நற்றிணை குறிப்பிடுகிறது. விருந்தினரை வழி அனுப்பும்போது ஏழடி நடந்து சென்று வழி அனுப்பிய செய்தியைப் பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது.

<u>வினாக்கள்</u>

6. இல்லறம் புரிவது எதற்காக என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

அ. கணவரைப் பேணுவதற்கு
ஆ. குழந்தைகளைப் பேணுவதற்கு
இ. உறவினரைப் பேணுவதற்கு
ஈ. விருந்தினரைப்பேணுவதற்கு

7.இளங்கோவடிகள் இயற்றிய காப்பியம்

அ. மணிமேகலை ஆ. சிலப்பதிகாரம்
இ. குண்டலகேசி ஈ.சூளாமணி

8. நடு இரவிலும் விருந்தினரை வரவேற்கும் நல்லியல்பு யாருக்கு உண்டு?

அ. குடும்பத் தலைவிக்கு ஆ. தோழிக்கு
இ. மகளுக்கு ஈ. செல்வந்தருக்கு

9.அல்லிலும் விருந்தோம்பிய நிகழ்ச்சியைக் குறிப்பிடும் இலக்கியம் யாது?

அ. கம்பராமாயணம் ஆ. பொருநராற்றுப்படை
இ. நற்றிணை ஈ. சிலப்பதிகாரம்

10. விருந்தினரை வழியனுப்பும் போது எத்தனை அடி நடந்து செல்வர்?

அ. 10 அடி ஆ. 7 அடி இ. 8 அடி ஈ. 12 அடி

பகுதி ஆ ( Section-B )

இலக்கணப்பகுதி ( Grammar)

III.சான்று தருக ( எவையேனும் மூன்று மட்டும்) 3×1=3

11.ஒற்றளபெடை

அ. ஓஒதல் ஆ. இலங்ங்கிய

இ. மனம் ஈ. உரனசைஇ

12.எதிர்மறைத்தொழிற்பெயர்

அ. நடவாமை ஆ. நடத்தை

இ. படித்தான் ஈ. விரும்பாதவர்

13. நான்காம் வேற்றுமை உருபும் பயனும்

உடன் தொக்க தொகை

அ. வீடு சென்றார் ஆ. தென்னை மரம்

இ. மலர்க்கொடி ஈ. தமிழ்த்தொண்டு

14.உரிச்சொல் தொடர்

அ. வயலும் வாழ்வும் ஆ.உறுபசி

இ. வருக வருக ஈ. கண்ணா வா

15. இன்னிசை அளபெடை

அ. உரனசைஇ ஆ.படாஅ பறை

இ. உண்பதூஉம் ஈ.ஓஒதல்

IV.. <u>நிரப்புக ( எவையேனும் மூன்று மட்டும்</u>) 3×1=3

16. இரு சொற்களுக்கு இடையில் சொல்லோ, உருபோ மறையாமல் அப்படியே பொருளை உணர்த்துவது ________ ______

அ. வினைமுற்றுத்தொடர் ஆ. தொகாநிலைத் தொடர்

இ. எழுவாய்த்தொடர் ஈ. விளித்தொடர்

17. குடிநீர் என்பது ______________- ________

அ. உரிச்சொல் தொடர் ஆ. இடைச்சொல் தொடர்

இ. வேற்றுமைத்தொகை ஈ. வினைத்தொகை

18. ________காலம் காட்டாது

அ. வினையாலணையும் பெயர்

ஆ. ஏவல் பன்மை வினைமுற்று

இ. தொழிற்பெயர்

ஈ. பெயரெச்சம்

19. சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வருவது ______________-

அ. வினைத்தொகை

ஆ. உவமைத்தொகை

இ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

ஈ. அன்மொழித்தொகை

20. இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது __________ ஆகும் .

அ. உரிச்சொல் தொடர் ஆ. இடைச்சொல் தொடர்

இ.பெயரெச்சத்தொடர் ஈ. வினையெச்சத்தொடர்

V..கூறியவாறு செய்க ( எவையேனும் மூன்று மட்டும்)

3×1=3

21. கெடுப்பதூஉம் (அளபெடையை நீக்குக)

அ. கொடுப்பதுவும் ஆ. கெடுப்பதும்

இ. கெடுப்பதூம் ஈ. கெடுப்பதாஅம்

22. எள் (பொது மொழியாக மாற்றுக)

அ. எள்ளைநடு ஆ. என்னோடு

இ. எட்டிப்பார் ஈ. எட்டு

23. பாய்ந்த புலி (காலம் கரந்த பெயரெச்சமாக மாற்றுக)

அ. பாய்புலி ஆ. பாய்கின்ற புலி

இ. புலி புலி ஈ. புலி பாய்ந்தது

24. படித்தான் ( வினையாலணையும் பெயராக மாற்று)

அ. படித்துப் பார்த்தான் ஆ) படிபடி

இ) படித்தவன் ஈ ) பாடியவனை

25. பாரி வந்தான் ( விளித்தொடராக மாற்றுக)

அ) வந்த பாரி ஆ) வந்தான் பாரி

இ) பாரி வா ! இ) வேள் பாரி

VI.. <u>இலக்கணக்குறிப்புத்தருக( எவையேனும் மூன்று மட்டும்</u>) 3×1=3

26. ஓடு ஓடு

அ. ஏவல் வினைமுற்று ஆ. இடைச்சொற்றொடர்

இ. அடுக்குத்தொடர் ஈ. வினையெச்சத் தொடர்

27. மலர்ப்பாதம்

அ. வினைத்தொகை ஆ. உவமைத்தொகை

இ. பண்புத்தொகை ஈ. அன்மொழித்தொகை

28. கேட்டவர்

அ. தொழிற்பெயர் ஆ. வினைமுற்று

இ. வினையாலணையும் பெயர் ஈ.பெயரெச்சத் தொடர்

29. தாமரை

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி

இ) பெயர்ச்சொல் ஈ) பொதுமொழி

30 .கொதி

அ.முதனிலைத் தொழிற்பெயர் ஆ. ஏவல்

இ. முதனிலைதிரிந்த தொழிற்பெயர் ஈ. எதிர்மறைத் தொழிற்பெயர்

பகுதி-இ ( Section- C)

இலக்கியம் (Literature)

VII..பின்வரும் கோடிட்ட இடங்களை திருக்குறளால் நிரப்புக 3×1=3

31. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்

________அறிவிலா தார்

அ. கல்லார் ஆ. வல்லார் இ. நல்லார்

ஈ. செல்லார்

32. ________பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்

அ. கண்ணால் ஆ. பண்என்னாம்

இ. கண்ணிகள் ஈ. இசையால்)

33. முயற்சி திருவினை ஆக்கும் ________

இன்மை புகுத்தி விடும்

அ. கல்வியின்மை ஆ. தூக்கமின்மை

இ. செல்வமின்மை ஈ. முயற்றின்மை)

VIII.. <u>பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக</u> 5×1=5

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே! மன்னுஞ்
சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

<u>வினாக்கள்</u>

34. இப்பாடல் இடம்பெற்ற நூல் யாது?
அ. தென்மொழி ஆ. கனிச்சாறு
இ. தமிழ்ச்சிட்டு ஈ. மனோன்மணியம்

35. பாடல் ஆசிரியரின் பெயர்
அ. பெருஞ்சித்திரனார் ஆ. சச்சிதானந்தன்
இ. பாரதியார் ஈ. நாமக்கல் கவிஞர்

36. இப்பாடல் ஆசிரியரின் இயற்பெயர்
அ. மாணிக்கவேலு ஆ. துரை.மாணிக்கம்
இ. கிள்ளிவளவன் ஈ. சுப்பையா

37. இப்பாடலில் குறிப்பிடப்படும்காப்பியங்கள்
அ. சிலப்பதிகாரம், குண்டலகேசி
ஆ.சிலப்பதிகாரம், எட்டுத்தொகை
இ. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை
ஈ. சிலப்பதிகாரம், மணிமேகலை

38.“நற்கணக்கே”என்று குறிப்பிடப்படுவது எது?
அ. திருக்குறள் ஆ. எட்டுத்தொகை
இ. பத்துப்பாட்டு ஈ. பதினெண்கீழ்க்கணக்கு

IX.<u>பின்வரும் பல பலவுள் தெரிவு வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை எழுதுக</u>

5×1=5

39.திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணத்தை எழுதியவர்

அ. தேவநேயப் பாவாணர் ஆ. கி. ராஜநாராயணன்

இ. கால்டுவெல் ஈ. ஜி. யு. போப்

40. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக்குறிக்கும் பயிர் வகை

அ. குலை வகை ஆ. மணி வகை
இ. கொழுந்து வகை ஈ. இலை வகை

41. மூச்சுப் பயிற்சியேஉடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர்

அ. திருமூலர் ஆ. சம்பந்தர்

இ. நப்பூதனார் ஈ. பாரதியார்

42. நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டுவதில் கரிகாலன் சிறந்தவன் என்று கூறியவர்

அ. பாடினி ஆ. அவ்வையார்

இ. வெண்ணிக் குயத்தியார் ஈ. ஆண்டாள்

43. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழும் விழா

அ. தீ மிதித்தல் ஆ. கூழ் ஊற்றுதல்

இ. பட்டிமன்றம் ஈ. வாழையிலை விருந்து

44".தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்

இழந்த என்னை ..." என்று கூறியவர் யார்?

அ. மாதவி ஆ.கண்ணகி இ. மணிமேகலை ஈ.சுதமதி

45. இந்தையாவிற்கு 70 விழுக்காடு மஜயளவைத் தரும் காற்று எது?

அ. தென்மேற்குப் பருவக்காற்று

ஆ.தென்கிழக்குப் பருவக்காற்று

இ. வடகிழக்குப் பருவக்காற்று

ஈ. வடமேற்குப் பருவக்காற்று

X. <u>பின்வரும் துணைப்பாடப் பகுதியைப் படித்துப் பொருள் உணர்ந்து தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக</u>

5×1=5

திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள் என்று குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா. பார்த்தசாரதி உவமையைப்

பயன்படுத்தி யுள்ளார். இலக்கியங்களில் உண்மையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றது. "முக நிலவில் வியர்வை முத்துக்கள் துளிர்த்தன" என்று உருவகமாக எழுதுகிறார்கள். உவம உருபு மறைந்து வந்தால் அதற்கு எடுத்துக்காட்டு உவமை அணி என்று பெயர்

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப் படும்"

என்ற திருக்குறள் இதற்குச் சான்றாகும். எடுத்துக்காட்டு உவமையணி உரைநடையில் பயன்படுத்துகையில் இணைஒப்பு என்கிறார்கள். உயிர் இல்லாத பொருட்களை உயிர் உள்ளன போலவும் உணர்வில்லாத பொருட்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வது உண்டு என்று தொல்காப்பியர் செய்யுளியலில்(192) கூறுகிறார். இதனை தற்போது இலக்கணை என்று கூறுகிறோம். இதனை, தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனார் தமது உரைநடையில் பின் வருமாறு பயன்படுத்துகிறார்: "சோலையில் புகுவேன் ;மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்;ஆல்,என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இது உண்டா என்று கேட்கும்?"

<u>வினாக்கள்</u>

46. குறிஞ்சி மலர் என்னும் நூலின் ஆசிரியர் ________

அ. திரு. வி. க. ஆ. நா. பார்த்தசாரதி

இ. வா. ராமசாமி ஈ. சா. கந்தசாமி

47. எடுத்துக்காட்டு உவமையணி தற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ. இணை ஒப்பு ஆ. இலக்கணை

இ. உருவகம் ஈ. முரண்பட்டு மெய்ம்மை

48. கேட்காதன கேட்பது போலவும் பேசாதன பேசுவது போலவும் கூறும் இலக்கண நூல் எது?

அ. திருக்குறள் ஆ. யாப்பருங்கலம்

இ. தொல்காப்பியம் ஈ அகத்தியம்

**49. இலக்கியங்களில் உவமையை விட உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுவது எது?**

**அ. குறிப்பணி** **ஆ. எதுகை நயம்**

**இ. அடுக்குத்தொடர்** **ஈ. உருவகம்**

**50. தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுபவர் யார்?**

**அ. மு. வரதராசனார்** **ஆ. பாரதியார்**

**இ. திரு.வி.கலியாண சுந்தரனார்**

**ஈ. நாமக்கல் கவிஞர்**